# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை

**முன்னிலை : திரு. P. சுந்தரமூர்த்தி, B.Com., LL.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஊத்தங்கரை (மு.கூ.பொ.)**

**2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21–ம் நாள் செவ்வாய்கிழமை**

(திருவள்ளுவர் ஆண்டு 2057, பராபவ வருடம், சித்திரை திங்கள் 08–ம் நாள்)

**அசல் வழக்கு எண். 58/2018**
**CNR.No.TNKI13-000065-2018**

சென்னையன் ...வாதி

//எதிர்//

சிவராஜ் ...பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 02.04.2026-ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. முருகேசன், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. முருகன், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கானது வாதியிடம், பிரதிவாதி கடனாக வாங்கிய புரோநோட்டு தொகை ரூ. 60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) மற்றும் பின்வட்டி தொகை ஆகியவற்றை பெற்றுத்தர கோரியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம்:**

2(i). வாதியிடம், பிரதிவாதி கடந்த 20.06.2016 தேதியில் குடும்ப செலவுக்காக வேண்டி ரூ. 60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ரொக்கமாக கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100/-க்கு ரூ. 1.00 வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியையும், அசலையும் வாதி வேண்டும்போது வாதிக்காவது, வாதியின் உத்திரவு பெற்றவருக்காவது ரொக்கமாக செலுத்துவதாக ஒப்பி 2016-ம் ஆண்டு ஜுன் மாதம் 20-ம் தேதியில் வாதிக்கு, பிரதிவாதி ஒரு புரோநோட்டினை ரெட்டிப்பட்டி கிராமத்தில் வைத்து எழுதிக்கொடுத்துள்ளார்.

2(ii). மேற்படி கடன் பாக்கிக்காக வாதி பிரதிவாதியிடம் பலமுறை நேரில் அணுகி கேட்டும், மேற்படி புரோநோட்டின் அசல் மற்றும் வட்டிக்காக யாதொரு தொகையும் செலுத்தாததால் வாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 17.02.2018 தேதியில் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு ஒன்றினை அனுப்பினார். அந்த சட்ட அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொண்ட பின்னரும், யாதொரு பதில் அறிவிப்பும் அனுப்பாமலும், தாவா புரோநோட்டு அசலுக்காகவும், வட்டிக்காகவும் யாதொரு தொகையும் செலுத்தாமலும் வீண்காலம் கடத்தி வருகிறார். தாவா புரோநோட்டு 1982–ம் ஆண்டுக்கு பின்னிட்டு ஏற்பட்டிருப்பதால், கடன் நிவாரண சட்டங்களின் பலன்கள் பிரதிவாதிக்கு பொருந்துவதில்லை. எனவே வாதியிடம், பிரதிவாதி கடனாக வாங்கிய புரோநோட்டு தொகை ரூ. 60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) மற்றும் பின்வட்டி தொகை ஆகியவற்றை

பெற்றுத்தர கோரியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

3(i). பிரதிவாதி வழக்கு சங்கதிகளை மறுத்துரைத்தும், வாதிக்கும், பிரதிவாதிக்கும் எந்த காலத்திலும், எந்த தொடர்பும் இருந்தது இல்லை. வாதி, பிரதிவாதிக்கு எதிராக புரோநோட்டினை மோசடியாக அவரது குமாரர் மணி என்பவருடன் கூட்டு சேர்ந்து மோசடியாக தயார் செய்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வாதி குறிப்பிட்டுள்ள தாவா மேற்சொன்ன காலத்திலோ அல்லது வேறு எந்த காலத்திலோ வாதியிடம் பிரதிவாதி கடன் ஏதும் பெறவுமில்லை வாதிக்கு புரோநோட்டு எதுவும் எழுதி தரவுமில்லை. வாதியின் குமாரர் மணி என்பவர் கந்துவட்டி தொழில் செய்து வருகிறார்.

3(ii). பிரதிவாதி, வாதியின் குமாரர் மணி என்பவரிடம் 2015 ஆம் ஆண்டும் ரூ. 50,000/-ம் கடன் பெற்று அதற்கு மாதம் ரூ. 6,500 வீதம் 10 மாதம் செலுத்த வேண்டும் என்றும் ஒப்புக்கொண்டு 9 மாதம் ரூ. 6,500 தவறாமல் செலுத்திவிட்ட நிலையில் 10-வது தவனை செலுத்த சிறிது கால தாமதம் ஆகிவிட்ட நிலையில் தவனை தொகை கொடுக்க வேண்டும் என மிரட்டி பிரதிவாதியின் இருசக்கர வாகனத்தையும், பிரதிவாதியின் கறவை மாட்டையும் பிடித்துச்சொன்று அக்கிரம செயலில் ஈடுபட்டதாகவும் வாதியின் மகன் மணி என்பவர் மீது 07.06.2017-ம் தேதியில் புகார் கொடுத்து மேற்படி புகார் கல்லாவி காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு மணி என்பவரை பலமுறை அழைத்தும் விசாரணை

ஆஜராகாமல் இருந்து வருகிறார். மேலும் பல நபர்களை அச்சுறுத்தி பணம் பறிக்க முயன்று வருவதால் பலநபர்கள் ஊத்தங்கரை மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவரிடம் புகார் மனு கொடுத்து விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருவதாக பிரதிவாதி தெரிவிக்கிறார்.

3(iii). வாதி பிரதிவாதிக்கு எதிராக, மோசடியாக பிரதிவாதிக்கு மணி என்பவர் கடன் தரும்போது பெற்று வைத்திருந்த புரோநோட்டில் இருந்த கையெழுத்தை மோசடியாக போட்டு மோசடியாக புரோநோட்டினை தயார் செய்து மணி என்பவர் அவரது தந்தையின் பேரில் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். வாதி தாக்கல் செய்துள்ளதால் வழக்கு புரோநோட்டு மோசடியானது, சட்டப்படி செல்லக்கூடியது அல்ல. வாதியின் வழக்கில் எவ்வித உண்மையும் இல்லை. வாதி வழக்கிற்காக இந்த பிரதிவாதியிடம் கடன் தொகையை நேரில் அணுகி பலமுறை கேட்டதாக பொய்யாக தெரிவித்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. தீர்வுகாண வேண்டிய வினா:**

4(i). வழக்குரை, பதிலுரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்த பிறகு கடந்த 19.03.2024 தேதியன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன:

(1) Whether the defendant executed the suit promissory note on 20.06.2016 for a debt of Rs. 60,000/- borrowed from plaintiff as averred by the plaintiff?

(2) Whether the plaintiff is entitled for recovery of the debt along with interest and subsequent interest as claimed by the plaintiff?

(3) To what other reliefs, if any, the parties are entitled to?

**5. சாட்சியம்:**

5(i). வாதி திரு. சென்னையன், **வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு, நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.3** வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் **வா.சா.2** ஆக திரு. கமலநாதன், என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார்.

5(ii). பிரதிவாதி திரு. சிவராஜ், **பி.வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் **பி.வா.சா.2** ஆக திரு. ராமானுஜம், என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**விவாதம்:**

6. **<u>எழுவினா 1-க்கான தீர்வு:</u>** வாதியின் வழக்குப்படி கடந்த 20.06.2016 தேதியில் பிரதிவாதி வாதியிடம் ரூ. 60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ரொக்கமாக பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100/-க்கு ரூ.1/- ரூபாய் வீதம் வட்டி சேர்த்து வட்டியையும் அசலையும் வாதி வேண்டும்போது வாதிக்காவது வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது கொடுப்பதாக ஒப்பி 20.06.2016–ம் தேதியில் வாதிக்கு பிரதிவாதி ஒரு புரோநோட்டினை ரெட்டிப்பட்டி கிராமத்தில் வைத்து எழுதி கொடுத்துள்ளார். அதன் பின்னிட்டு பலமுறை கேட்டும் பிரதிவாதி அசலும் வட்டியும் செலுத்தவில்லை. அதனால் கடந்த தேதியில் வாதி பிரதிவாதிக்கு ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார். சட்ட அறிவிப்பை பெற்றுக் கொண்டும் பிரதிவாதி பணம் செலுத்தாமலும் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்காமலும் இருந்துவருகிறார்.

7. எனவே பிரதிவாதி ஏற்படுத்திக் கொடுத்த புரோநாட்டின் அடிப்படையில் அவர் வாதியிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்று வாதி தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதி தரப்பில் வாதியின் வழக்கை மறுத்து வாதியிடம் பிரதிவாதி எப்பொழுதும் கடன் பெறவே இல்லை என்றும் அதற்கு புரோநோட் எழுதிக் கொடுத்ததாக சொல்வது மோசடியானது, வாதியின் மகனிடம் பிரதிவாதி ஏற்கனவே கடன் பெற்று அது சம்பந்தமாக இருவருக்குள்ளும் பிரச்சனைகள் இருந்து வந்ததாகவும் அந்த புரோநோட்டில் உள்ள கையெழுத்தை மோசடியாக போட்டு தாவா புரோநோட்டை வாதி தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என்று பிரதிவாதி தரப்பில் தாவா புரோநோட்டும் அதில் உள்ள கையொப்பமும் மறுக்கப்பட்டு பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. இந்த நிலையில் வாதியிடம் பிரதிவாதி கடந்த 20.06.2016 தேதியில் கடன் பெற்றார் என்றும் அதற்கு தாவா புரோநோட்டு எழுதிக்கொடுத்தார் என்றும் நிரூபணம் செய்ய வேண்டிய முதல்நிலை சுமையானது வாதியின் மீதே அமைந்துள்ளது. மேற்படி வாதி தரப்பு முதல்நிலை சுமையை நிரூபணம் செய்ய வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரணை செய்துகொண்டு பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக கூறும் கடனுறுதி சீட்டை வா.சா.ஆ.1 ஆகவும், அதற்கு வாதி அனுப்பிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், அஞ்சல் ரசீது வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்துள்ளார்.

9. மேற்படி 20.06.2016 தேதியிட்ட கடனுறுதி சீட்டு பரிசீலனை செய்கையில் அது அச்சிடப்பட்ட தாளில் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணமாக உள்ளது. மேற்படி கடனுறுதி சீட்டு குறித்து வாதியை குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் அவர் தனது குறுக்கு விசாரணையின் பத்தி 4-ல் **வழக்கு கடனுறுதி சீட்டு அச்சுத்தாளா, வெள்ளை தாளா என்றால் வெள்ளை தாளில் அவரே எழுதி எடுத்து வந்துள்ளதாக சொல்லி கொடுத்தார்** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வாதியின் சாட்சியமானது தனது தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முரண்பட்ட வகையில் அமைந்துள்ளது. வெள்ளைத் தாளில் எழுதிக் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் ஆவணம் எதுவும் வாதி தரப்பில் இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. வா.சா.ஆ.1 பிராம்சரி நோட் என்று தலைப்பிடப்பட்ட அச்சிடப்பட்ட தாளில் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணமாக உள்ளது.

10. மேற்படி கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் இட்டதாக கூறப்படும் நபர்கள் குறித்து வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் **பிரதிவாதி படித்து காண்பித்தார், பிறகு வழியில் சென்ற கமலநாதன் மற்றும் ராஜசேகர் ஆகியோரை அழைத்து சாட்சி கையொப்பங்கள் வாங்கப்பட்டது, அவர்கள் இருவரும் சாட்சி கையொப்பங்கள் செய்தார்களா என்றால் ஆமாம்** என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே கடனுறுதி சீட்டு சாட்சிகள் முன்னிலையில் எழுதப்படவில்லை என்பது வாதி தரப்பு சாட்சியத்தின் படி தெளிவாகிறது.

11. மேலும் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள கமலநாதன் தன்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 20.06.2016 தேதியில் நான் எனது சொந்த வேலை காரணமாக சென்று கொண்டிருந்தபோது சென்னையன் வீட்டிடம் இருந்து சிவராஜ் என்பவர் என்னையும் ராஜசேகர் என்பவரையும் சிவராஜ் சென்னையனிடம் கடன் பெற்றதற்காக சாட்சி கையெழுத்திட வேண்டும் என்று எங்களை கூப்பிட்டார், சென்னையன் என்பவர் சிவராஜ் என்பவருக்கு ரூ. 60,000/- கடன் கொடுத்தார், மேற்கண்ட பணத்தை பெற்றுக்கொண்ட சிவராஜ் என்பவர் பணத்தை சரி பார்த்து புரோநோட்டில் கையெழுத்து செய்தார், அதன் பிறகு நானும் ராஜசேகர் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று சாட்சி அளித்துள்ளார். அதேபோல் அவர் தனது குறுக்கு விசாரணையில் பத்தி 2-ல் **நான் கடனுறுதி சீட்டில் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன், கடனுறுதி சீட்டை எங்கள் முன்னிலையில் எழுதி கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை, பிரதிவாதி எழுதி எடுத்து வந்து கையொப்பம் மட்டும் எங்கள் முன்னிலையில் செய்தார்** என்று சாட்சியமளித்துள்ளார். மேலும் **நானும் ராஜசேகரும் சாட்சியாக கையொப்பம் செய்தோமா என்றால் ஆமாம்** என்று சாட்சியமளித்துள்ளார். குறுக்கு விசாரணை பத்தி 3-ல் **கடனுறுதி சீட்டை எழுதியவர் என்று யாராவது கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை** என்றும் சாட்சியமளித்துள்ளார். **பணம் கொடுத்தவர் கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை, வெள்ளை தாளில் எழுதப்பட்டதா அச்சுத்தாளில் எழுதப்பட்டதா என்றால் அச்சு செய்த பாண்டு தாளில் எழுதப்பட்டது** என்று வா.சா.2 சாட்சியமளித்துள்ளார்.

12. மேற்படி வா.சா.2 சாட்சியத்தை வைத்து வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வா.சா.2 ஆன கமலநாதன் கடனுறுதி சீட்டில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளதும் ராஜசேகர் என்பவர் எழுதியவர் என்று கையொப்பம் செய்துள்ளதும் அறிந்து கொள்ள முடிகிறது. ஆனால் வாதியின் சாட்சியமும் வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட வா.சா.2 சாட்சியமும் கடனுறுதி சீட்டை பிரதிவாதியே எழுதி எடுத்து வந்தார் என்று அமைந்துள்ளது. மேலும் வா.சா.2 ஆனவர் தெளிவாக எழுதியவர் என்று யாரும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்று குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ள நிலையில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதியவர் என்ற இடத்தில் ராஜசேகர் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்று அறிந்து கொள்ள முடிகிறது. இது வா.சா.ஆ.1-ன் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

13. மேலும் இந்த வழக்கில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக முன்னிலையாகி சாட்சியமளித்துள்ளார். அவரை குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் வாதி தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சாட்சியங்களையும் வெளிக்கொணர முடியவில்லை. மேலும் கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என்று குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். குறுக்கு விசாரணையில் வழக்கு கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்று நிரூபிக்க நடவடிக்கை ஏதாவது எடுத்துள்ளேனா என்றால் இல்லை என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் அதன் பின்னிட்டு பிரதிவாதி தரப்பில் கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என்று நிரூபணம் செய்வதற்காக அந்த கையொப்பத்தை நிபுணர் அறிக்கை பெற வேண்டும் என்று மனு தாக்கல் செய்து அது

இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு பிரதிவாதியின் கையொப்பங்கள் நிபுணர் அறிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

14. மேற்படி தடைய அறிவியல் துறை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு பெறப்பட்ட நிபுணர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக தற்போது இந்த தீர்ப்பின் போது குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் இந்நீதிமன்றத்தில் பெறப்பட்ட பிரதிவாதியின் கையொப்பங்களும் அவர் முன்னிலைப்படுத்திய கடந்த 13.03.2019 தேதியிட்ட பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாக கூறப்படும் தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள கையொப்பங்களும் தடைய அறிவியல் துறையால் பரிசீலனை செய்யப்பட்டு மேற்படி கையொப்பங்களும் வா.சா.ஆ.1-ல் பிரதிவாதி செய்ததாக கூறப்படும் கையொப்பமும் ஒரே நபரால் செய்யப்பட்ட கையொப்பங்கள் அல்ல என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி நிபுணரின் கருத்துரைப்படி வா.சா.ஆ.1-ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியால் செய்யப்பட்ட கையொப்பம் இல்லை என்று அறிந்து கொள்ள முடிகிறது. மேற்படி நிபுணர் அறிக்கை சரியானதல்ல என்று வாதி தரப்பில் எந்தவித வாதத்தையும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இதன்மூலம் வாதி தரப்பில் முதல்நிலை சுமையை நிரூபிக்கவில்லை என்பதால் மாற்றுமுறையாவண சட்டத்தின் படியான அனுமானங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல.

15. எனவே மேற்படி வா.சா.1, 2 சாட்சியங்களுக்கும் வா.சா.ஆ.1-ல் உள்ள சங்கதிகளுக்கும் முரண்பட்ட வகையில் அமைந்துள்ளதும் பிரதிவாதி கூறியது போல் வா.சா.ஆ.1-ல் உள்ள கையொப்பம்

தன்னுடையதல்ல என்ற கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் நீ.ம.சா.ஆ.1 நிபுணர் அறிக்கை அமைந்துள்ளதாலும் மேற்படி வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றும் அதன் அடிப்படையில் அவர் வாதியிடம் கடன் பெறவில்லை என்றும் பி.வா.சா.2 சாட்சியத்தின் அடிப்படையில் அது வாதியின் மகன் மணி என்பவரிடம் பிரதிவாதி கடன் பெற்றதற்காக செய்து கொடுத்த புரோநோட்டில் உள்ள கையொப்பத்தை கொண்டு மோசடியாக தயார் செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

16. **<u>எழுவினா 2-க்கான தீர்வு:</u>** வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வா.சா.ஆ.1-ல் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றும், அது மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்பதற்கு போதுமான முகாந்திரங்கள் உள்ளது என்றும், வா.சா.ஆ.1 புரோநோட்டு பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்று எழுவினா 1-க்கு தீர்வு காணப்பட்டுள்ளதாலும், வா.சா.ஆ.1-ன் அடிப்படையில் பிரதிவாதி ரூ. 60,000/- வாதியிடம் கடன் பெற்றதாக கூறுவது உண்மையல்ல என்று எழுவினா 1-க்கு தீர்வு காணப்பட்டுள்ளதாலும் வாதி கோரியவாறு பிரதிவாதியிடம் தாவா தொகையும் பின் வட்டியும் பெற உரிமையானவர் இல்லை என்று இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

17. **<u>எழுவினா 3-க்கான தீர்வு:</u>** வா.சா.ஆ.1 புரோநோட்டானது மோசடியாக தயார் செய்யப்பட்டது. அதனால் தாவா பரிகாரம் வாதிக்கு

கிடைக்கக்கூடியதல்ல என்று எழுவினா 1, 2-க்கு தீர்வு காணப்பட்டுள்ளதால் மோசடியாக தயார் செய்யப்பட்ட கடனுறுதி சீட்டைக் கொண்டு வழக்கு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் பிரதிவாதி இந்த வழக்கை எதிர்த்து நடத்தி வந்து பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளதால் தாவா செலவுத்தொகைகள் வாதி பிரதிவாதிக்கு செலுத்தப்பட வேண்டும் என்று இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக,** வாதி கோரியவாறு தாவா புரோநோட்டு தொகை ரூ. 60,000/-மும் (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) அதன் பின்வட்டியும் நீதிமன்ற செலவும் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று தாவா தள்ளுபடி செய்யப்பட்டும், தாவா செலவுத்தொகைகள் பிரதிவாதிக்கு வாதி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா. 1 : திரு. சென்னையன் (வாதி)

வா.சா. 2 : திரு. கமலநாதன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| Exhibit | Date | Document | Remarks |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 20.06.2016 | புரோநோட்டு | அசல் |
| வா.சா.ஆ.2 | 17.02.2018 | சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | -- | அஞ்சல் ரசீது | அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி:</u>**

பி.வா.சா. 1 திரு. சிவராஜ் (பிரதிவாதி)

பி.வா.சா. 2 திரு. ராமானுஜம்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை

**<u>நீதிமன்ற ஆவணங்கள்:</u>**

| Exhibit | Date | Document | Remarks |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 22.05.2025 | தடைய அறிவியல் நிபுணர் அறிக்கை | அசல் |

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை